டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் கருவுற்ற பெண்களுக்கு ரூபாய் 6,000 நிதியுதவி எவ்வித வருமானச் சான்றிதழுமின்றி வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஊராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர், உங்கள் பேச்சை முடியுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: One second. ஊராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் கைத் தொலைபேசி, land line Phone connection மற்றும் Two Wheeler போன்றவை இருந்தால் அவர்களுக்கு, உழவர் அட்டை வேண்டுமென்று கேட்கிறார்கள்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

6. அறிவிப்பு

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கை விவாதம் 24-4-2008 அன்றும் தொடர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் நாளையும் தொடரும். நாளை, முதலில் டாக்டர் க. நெடுஞ்செழியன், பின்னர் திரு. எம். அன்பழகன், அதன் பின்னர் திரு. ஆர்.கே. பாரதி மோகன் ஆகியோர் பேசலாம்.

7. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (24-4-2008) வியாழக்கிழமை, வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

2008 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி *32*-ஐ *24-4-2008*, வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை, *24-4-2008* அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை, *24-4-2008* (வியாழக்கிழமை) காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-31* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

48. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் *323 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS